பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 11 செவ்வாய்க்கிழமை (24-03-1992) UTHAYAN — A lively National Tamil Daily கதிர்: 118

# தீர்வுக்கு புலிகள் யோசனை தந்தால்
# தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வருமாம்

## அழைப்புக் கடிதத்தை நேற்று ஆராய்ந்த பின்னர் முடிவு

கொழும்பு, மார்ச் 24

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இனப்பிரச்சினைக்குத் தமது சொந்த யோசனைகளைத் தந்தால் மட்டுமே தனது பிரதிநிதிகளை வடபகுதிக்கு அனுப்புவது என்று நேற்று நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவு செய்தது.

தெரிவுக் குழுவை யாழ்ப்பாணம் வருமாறு விடுதலைப் புலிகள் தரப்பில் விடுக்கப்பட்ட சம்பிரதாய அழைப்புக் கடிதம் குறித்து நேற்று விரிவாக ஆராயப்பட்டது. அதன் பின்னரே மேற்கண்ட முடிவு எடுக்கப் பட்டது.

எனினும் இது விடயத்தில் தெரிவுக்குழு உறுப்பினர் மத்தியில் இரண்டு கருத்துக்கள் நிலவியதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியவந்தது.

யாழ்ப்பாணம் வருமாறு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவுக் குழுவை எழுத்து மூலமாகக் கேட்டால், குழுவின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் செல்வர் என்று முன்னர் குழு வட்டாரங்கள் அறிவித்திருந்தன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 24

வவுனியாப் பகுதியில் நேற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் விளக்குவைத்த குளம் பகுதியில் இரண்டு விமானங்கள் குண்டுகளை வீசின. இதனால் ஒரு வீடு பெரும் சேதமுற்றது. [உ]

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வவுனியா பேயாடி கூழாங்குளம் மற்றும் செட்டிகுளம் இராணுவ முகாம்களிலிருந்து கடந்த இரு தினங்களாக குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. [உ]

## மூதூரில் ஊரடங்கு நீடிப்பு

கொழும்பு, மார்ச் 24

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நேற்று மாலை 5 மணி முதல் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை நீடிக்கும் என்று கூட்டுப் படைகள் தலைமை அலுவல

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தேடுதலும் தீவிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மூதூரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதை அடுத்து அங்கு முப்படையினரும் கடும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் மற்றும் நடவடிக்கைகள் இப்பகுதியில் பெருமளவு அதிகரித்திருப்பதை அடுத்தே, படையினர் ஊரடங்கு பிறப்பித்து தேடுதலை தீவிரப்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## பூநகரியில் படையினர் சூடு!

யாழ்ப்பாணம், மார்ச் 24

பூநகரி, கல்முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று அதிகாலை 50 கலிபர் தாக்குதல்களை நடத்தினர்.

அதேவேளை - நேற்று முன்தினம் இரவு 'பரா' வெளிச்சம் ஏவப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது. [உ-3]

## கச்சதீவைத் திரும்பப் பெற
## இந்தியா ஆலோசிக்கிறது!

### பிரதமர் நரசிம்மராவ் தமிழக அரசுக்குத் தகவல்

சென்னை, மார்ச் 24

கச்சதீவைத் திரும்பப் பெறுவது என்ற கோரிக்கை குறித்து இந்திய அரசு கவனமாக ஆராய்ந்து வருகிறது

இத்தகவலை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்டசபையில் வெளியிட்டார்.

இந்த விடயம் குறித்து தமிழ்நாடு அரசு விடுத்திருக்கும் கோரிக்கையை ஆழமாக ஆராயும்படி வெளியுறவு அமைச்சை பிரதமர் நரசிம்மராவ் பணித்திருக்கிறார்.

"இத்தீவைத் திரும்பப் பெறுவது என்பது முக்கியமான கொள்கைக் கோட்பாடு விளைவுகளை உள்ளடக்கியுள்ளது. ஆகையால்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### தமிழகத்தில் இருந்து திரும்புவோர் தங்க

## பாலம்பிட்டி முகாம் பகுதி தாக்குதலற்ற பிரதேசமாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 24

தமிழகத்தில் இருந்து திரும்பும் ஈழத்தமிழ் அகதிகளைத் தங்க வைக்கும் பொருட்டு, ஐ. நா. அகதிகள் தூதரகம் முகாம் அமைப்பதற்கு தெரிவு செய்துள்ள பாலம்பிட்டிப் பகுதி தாக்குதலற்ற பிரதேசமாகப் பிரகடனம் செய்யப் படும்.

தமிழகத்தில் இருந்து திருப்பி அனுப்பப்படும் ஈழத் தமிழ் அகதிகளைப் பொறுப்பேற்றுப் பராமரிக்க ஐ. நா. அகதிகள் தூதரகம் முடிவு செய்தது உதயன் வாசகர்கள் அறிந்ததே.

அகதிகள் முகாமை விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள மடுவுக்குச் சமீபமாக இருக்கும் பாலம்பிட்டியில் நிறுவுவதற்கும் ஐ. நா. அகதிகள் தூதரகம் முடிவு செய்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஸ்ரீலங்காவுக்கான உதவி நாணய நிதியம் நிறுத்தும்!

பொன், மார்ச் 24

சர்வதேச நாணய நிதியம் ஸ்ரீலங்காவுக்கு வழங்க ஒப்புக்கொண்ட கடன் தொகை ஸ்ரீலங்காவுக்கு கிடைக்காமல் போகலாம்; அல்லது கிடைப்பது தாமதமாகலாம்.

இவ்வாறு ஜேர்மன் வானொலி தனது செய்தி விமர்சனத்தில் நேற்றுத் தெரிவித்தது.

ஸ்ரீலங்காவின் பொருளாதார வளர்ச்சியில் அந்நாட்டு அரசு காட்டும் அக்கறை திருப்தி தருவதாக அமைந்திருக்கவில்லை என சர்வதேச நாணய நிதியம் கருதுவதாகவும்—

அதனால் தனக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து

[2 ஆம் பக்கம் பார்க்க]

## நாகர்கோவிலில் விரைவில் காவல் நிலையம் திறப்பு

தமிழீழ காவல் துறையின் எட்டாவது காவல் நிலையம் நாகர்கோவிலில் அமைக்கப் படவிருக்கிறது.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தக் காவல் நிலையத்துக்கு தேவையான ஆட்கள் திரட்டப்படுவதாகவும்—

விரைவில் அந்த நிலையம் திறக்கப்படும் என்றும்— அவர் சொன்னார். [உ-3]

### உணவுப்பொருள் எடுத்து வர

## வவுனியா அரச அதிபரும் அனுமதி வழங்க அதிகாரம்

கொழும்பு, மார்ச் 24

வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் அதிகாரம் வவுனியா அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை வானொலி இது குறித்து நேற்று அறிவித்தது.

எனினும் வடபகுதிக்கு மருந்துகளை எடுத்துச் செல்வதற்கு கொழும்பில் மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

வவுனியாவில் நேற்று ஆரம்பமான புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் நடமாடும் சேவையின் போது இத்தகவல்கள் வெளியிடப்பட்டன. [அ-எ]

## மணலாறு தாக்குதல்களில் பல பொதுமக்கள் காயம்

மணலாறில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்ற குண்டு வீச்சாலும், ஷெல் வீச்சாலும் பத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானக் குண்டு வீச்சும், இராணுவ முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதலும், கடல் பீரங்கித் தாக்குதலும் தொடர்வதாகவும் —

இந்த தாக்குதல்களினால் நாயாறுப் பகுதியில் காடுகள் அழிந்துள்ளதுடன் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை நாசமாகியுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## மட்டக்களப்பு நகரில் 3 தமிழர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு நகரில் கடந்த வியாழனன்று மூன்று தமிழர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் வீதியில் வீசப்பட்டுக் கிடந்தன.

நகரின் பிரதான வீதியில் கிடந்த — அடையாளம் காணப்படாத — இந்தச் சடலங்கள் மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

கடந்த வாரத்தில் அப்பிரதேசத்தில் 10 தமிழர் படையினரால் கொல்லப்பட்டதாகவும் —

அவர்களில் பெரும்பாலானவர்கள் பொலன்னறுவை எல்லைக் கிராமங்களில் வசித்த தமிழர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## ஏழு போர் முனைகளில் இராணுவ நடவடிக்கையாம்!

கொழும்பு, மார்ச் 24

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏழு போர் முனைகளில் அரசுப் படைகள் இராணுவ நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளன என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வெலிஓயா, வவுனியா, திருகோணமலை, தொப்பிகல, அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய பகுதிகளில் உள்ள போர் முனைகளில் இந்த இராணுவ நடவடிக்கை

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டும் மீனவரை உடனடியாக விடுவியுங்கள்

## இலங்கையிடம் இந்தியப் பிரதமர் ராவ் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 24

இந்திய மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லையை தப்பித்தவறி தாண்டும் பட்சத்தில் கைது செய்யப்பட்டால் அவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றார்.

கைதாகும் மீனவர்களை மனிதாபிமானத்துடன் நடத்தும்படியும் திரு. நரசிம்மராவ் இலங்கையிடம் கோரியிருக்கின்றார்.

தமிழ்நாடு சட்டசபையில் இத்தகவல்களை முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுவது குறித்து தாம் அனுப்பிய கடிதத்திற்கு பிரதமர் இப்படிலை அனுப்பியிருக்கிறார் என்றும் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார். [உ-எ]

# குமணவில் ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் 'குமண' கப்பலில் இம் மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சர்களும் எடுத்து வரப்படுவதாக யாழ். செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (இ-5)

## மீனவர்கள் மீது தாக்குதல்:

# இலங்கை தூதரை அழைத்து இந்தியா கவலை தெரிவிப்பு

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் நேற்று இந்திய வெளியுறவு அமைச்சு அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து இந்தியாவின் கவலையை வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் அவரிடம் தெரிவித்தார்கள்.

இச்சம்பவங்கள் பற்றி வருத்தம் தெரிவித்த இலங்கைத் தூதர், இந்தியாவின் கவலையை இலங்கைக்குத் தெரிவிப்பதாகவும் அதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்றும் உறுதியளித்தார். [உ-எ]

## ஜி. சீ. ஈ. (உயர்தர) விசேட பரீட்சை

# காகிதாதிகள், ஆவணங்கள் இன்று கப்பலில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், மார்ச் 24

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. [உயர்தர] விசேட பரீட்சைக்குத் தேவையான காகிதாதிகளும், பரீட்சைக்குத் தேவையான ஏனைய ஆவணங்கள் மற்றும் பொருள்களும் 'குமண' கப்பலில் எடுத்து வரப்படுவதாக நேற்று யாழ்ப்பாணத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.

''குமண'' கப்பல் அனேகமாக இன்று பருத்தித்துறையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பரீட்சைக்கான வினாத்தாள்கள் அடுத்த வார முற்பகுதியில் விமான மூலம் பலாலி வழியாக எடுத்து வரப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

# விசர்நாய் தடுப்பு மருந்து இந்தியாவிலிருந்து வரும்

## மாநகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். மாவட்டத்தில் விசர்நாய்க்கடியால் இறப்போர் எண்ணிக்கை அதிகரிப்பதால் இந்தியாவில் இருந்து விசர்நாய் நோய்த்தடுப்பு மருந்தை வரவழைக்க யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த ஜனவரியில் இருந்து இதுவரை எட்டுப்பேர் விசர்நாய்க் கடியால் இறந்துள்ளனர்.

கொழும்பில் போதிய அளவு விசர்நாய் நோய்த் தடுப்பு மருந்து பெறமுடியாததால், இந்தியாவில் இருந்து தருவிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை — விசர்நாய் நோய்த் தடுப்பூசி ஏற்ற தனியான நிலையம் ஒன்றை நிறுவவும் மாநகரசபை முயற்சி எடுத்துள்ளது. (இ-3)

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## மருந்து கொடுப்பவர் [ஓடலி] பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் ஆயுர்வேத மருந்து கொடுப்பவர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

**தகைமைகள் :**

1. வயது : 18 தொடக்கம் 40 வரை.
2. கல்வித் தகைமை :
   க. பொ. த. [சா/த] பரீட்சையில் தமிழ்மொழி, எண்கணிதம் / தூயகணிதம் / வர்த்தக கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
   அல்லது
   க. பொ. த. [சா/த] வரையான கல்வியுடன் ஐந்து வருடங்களுக்குக் குறையாது யாழ்ப்பாண மாநகர சபையில் சேவையாற்றியிருத்தல்.
3. அனுபவம் :
   ஆயுர்வேத மருந்து தயாரிக்கும் / கொடுக்கும் துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.
4. யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும், தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் எதிர்வரும் 28-3-92ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 00 மணிக்கு நல்லூரிலுள்ள மாநகரசபை அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
23-3-1992.

[சி/1732]

# ஸ்ரீலங்காவுக்கான....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடனை வழங்க மறுப்பதற்கு அல்லது தாமதப்படுத்துவதற்கு நாணய நிதியம் ஆலோசித்து வருவதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டது.

இவ்வருடம் ஸ்ரீலங்காவுக்கு 45 கோடி டொலர் உதவி வழங்க சர்வதேச நாணய நிதியம் இணங்கியிருந்தது. அதில் முதல் தொகுதியாக ஏழரைக் கோடி டொலர் — அதிகரிக்கப்பட்ட கூட்டமைப்பு மறுசீரமைப்பு நிதி [ESAF] என்ற பெயரில் — கடந்த அக்டோபரில் வழங்கப்பட்டது.

ஏப்ரலில் வழங்கப்படும் இரண்டாவது தொகுதி கொடுப்பனவு மேலும் பல மாதங்கள் தாமதமாகும் என்று தற்போது கருதப்படுகிறது.

நாட்டில் பொருளாதாரச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும் வேகம் நிதியத்துக்கு அதிருப்தி அளித்துள்ளது என்றும் —

நிதியத்தின் எதிர்பார்ப்புப்படி —

அரச பெருந்தோட்டங்கள், வங்கிகள் என்பவற்றைத் தனியாரிடம் ஒப்படைத்தல், வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையைக் குறைத்தல், செலவுகளைக் குறைத்தல் போன்ற சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் —

வெளிநாட்டு மூலதனங்களை வரவேற்பதில் அரசு சரியான பாதையில் செல்வதாக நாணய நிதியம் கருதுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, கடந்த 9 வருடங்களாக தீவிரமடைந்து வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரத் தவறியதன் காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஸ்ரீலங்காவில் முதலீடு செய்யத் தயக்கம் கொண்டுள்ளனர் எனவும் —

இதனால் போதிய வெளிநாட்டு மூலதனம் நாட்டிற்குள் வரவில்லை எனவும் நாணய நிதியம் கருதுகிறதாம்.

ஸ்ரீலங்காவின் பாதுகாப்புச் செலவு 1991இல் 370 மில்லியன் டொலருக்கு அதிகமாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டில் ஸ்ரீலங்காவுக்குக் கிடைத்த வெளிநாட்டு மூலதனம் 70 மில்லியன் டொலர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. — இவ்வாறு அந்த விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி பாக்கியம் நாகராசா

தோற்றம்: 18—03—1918 மறைவு: 23—02—1992

குலமகளாய் குடும்பத்தின் ஒளி விளக்காய், அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், நீ இருந்தாய், பாசமுடன் கால மெல்லாம் எமை வளர்த்தாய். நேசமுள்ள உம் நினைவு எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

ஆலங்குளாய், சண்டிலிப்பாய்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

[20201]

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(24—03—1992)

அன்னை மடியில்: 20 — 07 — 1922



ஆண்டவன் அடியில்: 17 — 08 — 1990

## திருமதி பூரணம் இராமலிங்கம்

அன்னைக்கு அன்னையாய், தந்தைக்கு தந்தையாய் எம்மைப் பெற்று வளர்த்துப் பேரிட்டுப் பாராட்டி, சீராட்டி ஆளாக்கிய அன்னை ஸ்ரீமதி பூரணம் இராமலிங்கம் அவர்களின் நினைவாக எமது இதய அஞ்சலியை எல்லாம் வல்ல சக்தியின் பாதபங்கயங்களில் சமர்ப்பணம் செய்கின்றோம்.

மக்கள்; இ. சிவநாதன், இ. லோகநாதன், இ. குணநாதன்,

மருமக்கள்: ரூபவதி, நகுலேஸ்வரி, பத்மாவதி,

குளுக்கண்டி லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

[20192]

ஓம்
விராட் விஸ்வப் பிரமணே நம

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் பிரசோற்பத்தி வருடம் பங்குனி மாதம் 12 ஆம் திகதி [25-03-1992] புதன்கிழமை முற்பகல் 9-49 மணி முதல் 10-50 வரையுள்ள விருச்சிக லக்கின சுபமுகூர்த்தத்தில்

எங்கள் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**குணசேகரம் (குணம்)**
அவர்களுக்கும்

எங்கள் புத்திரி
திருநிறை செல்வி
**திலகராணி (சோபனா)**
அவர்களுக்கும்

திருவருளை முன்னிட்டு மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் சுற்றத்தவர்களையும், நண்பர்களையும் குடும்ப சமேதரராய் வருகைதந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி க. ஆசைப்பிள்ளை
''திருமகள் வாசம்''
நிகரை வீதி—சங்கானை.

திரு திருமதி க திருநாவுக்கரசு
''திருமணி இல்லம்''
நாவற்குழி கிழக்கு—நாவற்குழி.

(இருவீட்டார் அழைப்பு)

[20202]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளை நாமே தீர்க்கும் வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் அநேகமானோர் பிரச்சினைகளைப் பற்றி மட்டுமே கூறுகிறார்கள். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை அறிந்திருப்பதும் முக்கியமானதாகும்.

எமது பிரச்சினையை நாமே தீர்க்கும் வாய்ப்பு இப்போது எமக்குக் கிடைத்துள்ளது.

கொழும்பு டி. எஸ் சேனநாயக்கா வித்தியாலய வெள்ளி விழா பரிசளிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசியதாவது:

குடியேற்ற ஆட்சிக் காலத்துக்கு முன் வாழ்ந்த மக்கள் பிரச்சினைகளை புத்திக் கூர்மையுடன் அணுகத் தெரிந்திருந்தனர். ஆனால் அந்நியர் ஆட்சியின்போது இந்தப் புத்திக் கூர்மை ஓரளவு மழுங்கி விட்டது.

குடியேற்ற காலத்தில் மக்கள் எந்தப் பிரச்சினையைத் தீர்க்கவும் அதிகாரிகளை நாட வேண்டி இருந்தது. தாமாகவே தீர்க்க வாய்ப்பு இல்லை. ஆனால் சுதந்திரத்திற்குப் பின்னர் இந்த நிலை மாறி நாமே எமது பிரச்சினைகளைத் தீர்க்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

(த)

## அங்குரார்ப்பணம்

கொழும்புத்துறை, மார்ச் 24

தும்புத் தொழிற்சாலைச் சங்கம் ஒன்று அண்மையில் கொழும்புத்துறை கிழக்கில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழ ஆய்வு நிறுவனம் மற்றும் உணவு உற்பத்திக் குழுவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த தொழிற்சாலையில் கயிறு தயாரித்தல், தும்புத்தடி செய்தல், கால்மிதி தயாரித்தல் போன்ற பல கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

[த-30]

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்துக்கு சமீபமாக உள்ள விளையாட்டரங்கில் நடைபெறும்.

யாழ். கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு வி. வேலாயுதம் பிரதம விருந்தினராகவும், திரு. ஆர். அருளானந்தம் சிறப்பு விருந்தினராகவும் பங்கு பற்றுவர்

[உ-30]

★ ★ ★

நாகலிங்க சுவாமிகள் குருபூசை சங்கானையில் உள்ள சுவாமிகள் நினைவாலயத்தில் இன்று நடைபெறும். பகல் மகாசுர பூஜையும், பஜனையும், மாலை சமயச் சொற்பொழிவும் இடம் பெறும்.

★ ★ ★

வடமராட்சி கிழக்கில் அகதிகள் பிரச்சினை குறித்து மாநாடு ஒன்று இன்று காலை 9 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளரும், அகதிகள் புனர் வாழ்வு விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரியுமான திரு.எஸ். பத்மநாதன் இந்த மாநாட்டைக் கூட்டி உள்ளார். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கு பற்றுவர்.

★ ★ ★

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட — ''சோழர் காலக் குடியேற்றங்களால் தோன்றிய பூநகரி இடப் பெயர்வுகள்'' என்ற கருத்தரங்கு — இன்று பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக புவியியல் விரிவுரை அறையில் நடைபெறும். சரித்திரத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பி. புஷ்பரத்தினம் கருத்தரங்கு உரையை வழங்குவார்.

பல்மொழி மற்றும் ஆங்கிலத் துறையின் தலைவர் பேராசிரியர் எஸ். சுசீந்திரராஜா கருத்தரங்குக்குத் தலைமை வகிப்பார்.

# டானியல் எழுத்தின் பின்புலம் பரிசீலிக்கப்படுவது அவசியம்

## நினைவுக் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 24

இன்றைய சமூக, பொருளாதார, அரசியல், போராட்ட நிலையில் நாம் விரும்பியோ, விரும்பாமலோ டானியல், போன்றவர்களின் எழுத்துகளுக்கு உள்ள பின்புலங்கள் சீர் தூக்கிப் பார்க்கப்பட வேண்டியனவாகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறினார்.

நல்லூர் கம்பன் கோட்டத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற மக்கள் எழுத்தாளர் கே. டானியலின் ஆறாவது நினைவு தினக் கூட்டத்தில் நினைவுரை நிகழ்த்துகையில் பேராசிரியர் அவ்வாறு கூறினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தை மல்லிகைப்பந்தல் அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி மேலும் கூறியதாவது:-

''தமிழ்க்கல்வி பின்னோக்கிச் செல்லும் நிலைக்கு மாறி உள்ளதை அவதானிக்க முடிகிறது''.

சமீப காலத்தில் ஈழத்து இலக்கியங்களையும், மொழி நடையையும் மறுதலிக்கின்ற நிலைமை தோன்றியுள்ளமையை கூர்மையாகக் கவனிக்க வேண்டும் — என்றார்.

யாழ். வெளிவாரிப் பட்டப் படிப்புகள் நிறுவனம் அமரர் கே டானியலின் ''கானல்'' நாவலையும், யாழ், பல்கலைக்கழகம் ''அடிமைகள்'' நாவலையும் பாடநூலாக்கி இருக்கின்றன — என்ற தகவல் நினைவு தினக் கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

அதேவேளை, பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் பேசுகையில் ''இரு தடவைகள் கலாநிதிப் பட்டத்துக்கு டானியலின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டிருந்தும் ஏன் இது வரையில் வழங்கப்படவில்லை?'' என்ற வினாவை எழுப்பினார்.

[அ-51]

### தெரிவு செய்யப்பட்ட

# முப்பது பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்

## கல்விப் பணிப்பாளர் உரை

மானிப்பாய், மார்ச் 24

யாழ்ப்பாண பிரதேசக் கல்விக் கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முப்பது பாடசாலைகள் முன்னோடிப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார்.

இணுவில் சைவப் பிரகாச மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசியதாவது:

இவ்வாறு கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் பாடசாலைகளுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் போது, நகரப் புறப் பாடசாலைகளை மாணவர்கள் நாடுவது குறைந்து விடும் என்று அவர் சொன்னார்.

[த-90-68]

# சிங்களக் குடியேற்றம் திருமலையில் தொடர்கிறது

## பி. பி. ஸி. செய்தியாளர் தகவல்

லண்டன், மார்ச் 24

அரசின் குடியேற்றங்கள் கூடுதலாக திருகோணமலைப் பகுதியிலேயே நடைபெறுகின்றன. திருகோணமலை நகரில் தற்போது 100க்கு 45 சத வீத சிங்களவர்கள் வசிக்கின்றனர். 40 வருடங்களுக்கு முன்னர் திருகோணமலையில் 100க்கு 10 வீதத்துக்கும் குறைவான சிங்களவர்களே வாழ்ந்தனர்.

பி. பி. ஸி. செய்தியாளர் கிறிஸ் மொறிஸ் 'கொழும்புக் கடிதம்' என்ற தலைப்பில் பி. பி. ஸிக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் சிங்களவர்கள் குடியேற்றப்படுவதோடு அவர்களின் பாதுகாப்புக்கென ஆயுதங்கள் வழங்கப்படுவது தொடர்ந்து நடக்கிறது. இதற்குத் தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்று கிறிஸ் மொறிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு கடந்த வாரம் தாம் விஜயம் செய்த போது நூறு யாருக்கு ஒன்றாக காவல் அரண்கள் அமைக்கப்பட்டிருப்பதைதாம் கண்டதாகவும், இதன் மூலம் நகரின் வாழ்க்கை இன்னும் சகஜ நிலைக்குத் திரும்பவில்லை என்பது புலனாவதாகவும் அவர் தமது கடிதத்தில் கூறி உள்ளார்.

ஒரு சிங்கள வியாபாரியை நான் நகரில் சந்தித்த போது ''இனி எந்த நேரம் என்ன நடக்கும் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாது உள்ளது'' என்று கூறினார்.

நீண்ட காலமாக முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுடன் இந்தியாவிலிருந்து வந்த அகதிகளும் சேர்ந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து திரும்பி வந்தவர்களில் பலர் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாமல் இருக்கிறார்கள்.

இவர்களது வீடுகள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருக்கின்றன. அந்த வீடுகள் இராணுவத் தாக்குதல்களினால் சேதமாக்கப்பட்டுள்ளன. கிராமத்துக்குச் செல்லும் பாதையின் இரு பக்கங்களிலும் சேதமுற்ற வீடுகளைக் காண முடிகிறது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-10)

## ரணில் இந்தியா பயணம்

கொழும்பு, மார்ச் 24

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியா சென்றுள்ளார்.

அவர் நாடு திரும்பும் வரை பதில் கைத்தொழில் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத்துறை அமைச்சராக திரு. எச். பி வன்னிநாயக்கா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

[இ-எ]

### யாழ். போதனா வைத்தியசாலைக்கு

# பத்திரிகை விளம்பரம் மூலம் டாக்டர்கள் நியமனமாவர்

யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறை நீக்கப்படும். பத்திரிகைகளில் விளம்பரம் செய்து புதிய டாக்டர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சமீபத்தில் கொழும்பு சென்று சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய யாழ். போதனா வைத்தியசாலைத் தூதுக்குழுவிடம் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

### இந்திரா கொலையின் போது

# இறந்த சீக்கியருக்கு அஞ்சலி; 100 எம்.பிக்கள் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 24

1984 இல் இந்திரா காந்தி கொலையுண்ட போது இடம் பெற்ற பழிவாங்கல் தாக்குதல்களில் உயிரிழந்த சுமார் 2,700 சீக்கிய மக்களுக்கு இந்திய நாடாளுமன்றம் இரு நிமிடம் மௌன அஞ்சலி செய்ய வேண்டும்.

இப்படி எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சுமார் 100 எம். பிக்கள் மத்திய அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

அத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க வேண்டும் என்றும், இது சீக்கிய மக்களுக்கு ஆறுதல் தரும் அம்சமாக அமையும் என்றும் இந்த எம். பிக்கள் அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ் வேண்டுகோளில் பாரதீய ஜனதாக் கட்சி, ஜனதா தள் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த எம். பிக்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

(த-எ)

# செஞ்சிலுவை சர்வதேசக்குழு அலுவலகத்தை மூட உத்தரவு

டெஹ்ரான், மார்ச் 24

ஈரான் அரசு தலைநகர் டெஹ்ரானில் இயங்கி வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அலுவலகத்தை உடனடியாக மூடிவிடுமாறு உத்தரவிட்டுள்ளது.

அந்த அலுவலகத்தின் பணியாளர்கள் ஒரு வாரத்துக்குள் நாட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது

செஞ்சிலுவைச் சங்க அமைப்பின் விதிகளுக்கு மீறியதாக, இந்த அலுவலகத்தின் நடவடிக்கைகள் அமைந்திருப்பதாக ஈரான் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

[இ-10)

### லிபியா மீதான நடவடிக்கை:

# அவசரம் காட்ட வேண்டாம் என்கிறது அரபு லீக்

கெய்ரோ, மார்ச் 24

லிபியா மீது விமானப் போக்குவரத்துத்தடை விதிப்பதில் அவசரப்பட்டு முடிவு எதுவும் எடுக்க வேண்டாம் என்று ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு அரபு லீக் பொதுச் செயலாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வேண்டுகோள் விடுத்தார்.

[இ-எ]

# உடலுக்கு தீங்குதரும் சாயம் உணவுப் பொருளில் கலப்பு

## சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

உணவுச் சாயத்துக்குப் பதிலாக உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் கோழிச் சாயம் போன்ற கலப்புச் சாயங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட, தின் பண்டங்களும், பான வகைகளும் குடாநாட்டில் விற்பனைக்கு வந்துள்ளன.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் இப்படி மக்களை எச்சரித்துள்ளார்.

நீண்ட காலமாக உணவுப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இருந்து வருவதை சாதகமாகப் பயன்படுத்தி, கோழிச் சாயம் போன்ற உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் சாயங்களைச் சிலர் உணவுப் பொருள்களுக்கு சேர்த்து வருகிறார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இவ்வாறான செயல்களைத் தடுப்பதற்காக யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவும். யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து விரைவில் உணவுத் தரப் பரிசோதனைக் கட்டுப்பாட்டுக் குழு ஒன்றை அமைக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம், சாவகச்சேரி.

[சி-1723]

### மணமகன் தேவை

யாழ். கத்தோலிக்க, லண்டனில் நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட, பெற்றோர் தமது அழகான, நற்குணம் உள்ள, 23 வயது நிரம்பிய கம்பியூட்டர் பட்டதாரி மகளுக்கு பொறியியல்ாளர், டாக்டர், கணக்காளர், பட்டதாரி மற்றும் நற்பதவியில் உள்ள தகுந்த வரனைத் தேடுகிறார்கள். கிறிஸ்தவர்களும் விரும்பத்தக்கது. பூரண விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். 393, C/o உதயன் யாழ்ப்பாணம்.

(20180)

### தேவை

சப்ளையர்களும், சிறு பையன்களும் தேவை. [இடம் பெயர்ந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்] ஹோட்டல் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(20185)

### இலவச திருமண சேவை

28 வயது, சுவாதி, செவ்வாய் 4, சுவிஸில் கடமை ஆற்றுபவருக்கு மணமகள் தேவை. திருமணம் இலங்கையில் செய்யலாம். விண்ணப்பங்கள் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4560]

36 வயது, தொழில் புரியும் Marine Engineer மணமகனுக்கு சங்கீத ஞானமுள்ள, அழகான பெண்ணும், 30 வயது, Computer ஆகக் கடமை புரியும் பெண்ணுக்கு மணமகனும் தேவை. நேரடித் தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4559]

---

யாழ். திவ்ய ஜீவன சங்கம் - நல்லூர்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28-03-92 சனிக்கிழமை மாலை 3-00 மணி அளவில் மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெறும். நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படவிருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

ஆயுட்கால அங்கத்தவர்கள் தவிர ஏனைய சாதாரண அங்கத்தவர்கள் யாவரும், தங்களுக்கான சந்தாப் பணத்தை நிலுவையுடன் எதிர்வரும் 28-03-92 இற்கு முன்பதாக செலுத்தும்படி வேண்டப்படுகின்றனர்.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர், மேற்படி சங்கத்தின் செயலாளரிடம் அறிந்து கொள்ளலாம்.

செயலாளர்,
யாழ். திவ்ய ஜீவன சங்கம்,
நல்லூர்.

[20197]

---

ஓம் ஸ்ரீ சாயிராம்

## 10ஆம் வருட நினைவஞ்சலி



அன்னை மடியில்:
23 — 09 — 1927

●

ஆண்டவன் கழலில்:
24 — 03 — 1982

### அமரர் தம்பிராசா சண்முகராசா
(மேற்பார்வையாளர் - இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்)

இளைய சமுதாயம் வருங்காலத்தைப் பற்றிய கலக்கமும், முதியோர்கள் கடந்த காலத்தைப் பற்றிய கலக்கமும் கொண்டுள்ளனர். நிகழ் காலத்தைப் பற்றி ஒருவரும் சிந்திப்பதில்லை. கடந்த காலத்தில் செய்ததன் பலனை அனுபவிப்பது நிகழ் காலத்தில், தற்போது செய்ததின் பலனை அனுபவிப்பது எதிர் காலத்தில். ஆகவே கடந்தகாலம், நிகழ்காலம் இரண்டிற்கும் இணைப்பாய் அமைவது நிகழ் காலமே. இதை நல்லமுறையில் பயன்படுத்தி சேவையின் மூலம் இறைவனை அடைய முயற்சித்தல் வேண்டும்.

பாபா

என்றும் உங்கள் நினைவு நீங்காத:
மனைவி திருமதி சண்முகராசா,
உறவினர்கள்.

''சோதிவாசம்'', இணுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(20165)

---

COMMERCIAL BANK

# வர்த்தக வங்கி - யாழ். கிளை
# புத்தாண்டு பரிசுப் போட்டி

வருகின்ற தமிழ் / சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டி
**வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியின்**
**யாழ். கிளையானது**
தனது வாடிக்கையாளர்களுக்கும் இப்பிரதேச மக்களுக்குமாக
**புத்தாண்டுப் பரிசுத் திட்டம் ஒன்றை முன்வைக்கின்றது**
இதன் பிரகாரம் கீழே தரப்பட்ட
கேள்விக் கொத்துக்கு சரியான விடை அளிக்கின்றவர்களில்
50 பேருக்கு அவரவர் அதிர்ஷ்டத்திற்கு உரிய வகையில்
★ பரிசில்கள் காத்திருக்கின்றன ★

இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விக் கொத்தை

முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,

என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரில் **31 - 03 - 1992** க்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பவும் அல்லது கையளிக்கவும்.

குறிப்பு:- இப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் 31-03-1992 அன்று 18 வயதிற்குக் குறையாதவர்களாக இருக்க வேண்டும்.

★ பரிசு பெறுபவர்களின் விவரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

இப் போட்டியில் வங்கியினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் தீர்க்கமானதும் ஆகும்.

வங்கி ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவரும் இப்போட்டியில் பங்குபற்றுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - -

## வர்த்தக வங்கி - யாழ். கிளை
## கேள்விக் கொத்து

1. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?

   ..........................................................................

2. தற்போதைய வர்த்தக வங்கியின் யாழ். கிளைக் கட்டடம் முன்பு எந்த நிறுவனத்தின் உடைமையாக இருந்தது?

   ..........................................................................

3. யாழ் வர்த்தக வங்கிக் கிளை இக் கட்டடத்தினைப் பொறுப்பேற்று எப்போது செயற்படத் தொடங்கியது?

   ..........................................................................

4. வர்த்தக வங்கிக்கு தற்போது இலங்கையில் எத்தனை கிளைகள் உண்டு?

   ..........................................................................

5. அவை எங்கெங்கு உள்ளன?

   ..........................................................................

   ..........................................................................

6. வர்த்தக வங்கியின் தலைமைச் செயலகத்தின் முகவரியைத் தருக?

   ..........................................................................

7. இவ் வங்கியின் தற்போதைய நிர்வாக இயக்குனரின் பெயர் என்ன?

   ..........................................................................

8. வர்த்தக வங்கியினால் மிகவும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு சேமிப்புத் திட்டங்களின் பெயரினைத் தருக?

   ..........................................................................

9. யாழ். வர்த்தக வங்கிக் கிளையில் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான ஆகக் குறைந்த ஆரம்ப வைப்புத் தொகை எவ்வளவு?

   ..........................................................................

10. தற்போது இவ் வங்கியினால் சேமிப்புக் கணக்கு வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் யாது?

   ..........................................................................

அனுப்புபவரின்

முழுப் பெயர்:-..........................................................

அடையாள அட்டை இலக்கம்/கடவுச் சீட்டு இலக்கம்:-..........................

முகவரி:-................................................................

..........................................................................

..........................................................................

[சி-1731]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தண்டனை வேண்டுவதே

சுகாதாரக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யாத—அதாவது சுகாதாரக் கேடு நிறைந்த — உணவு விடுதிகள், தேநீர்ச் சாலைகள், பாண் உற்பத்தி நிலையங்கள் மற்றும் உணவு பரிமாறப்படும் நிலையங்களுக்கு இந்த வருடத்திற்குரிய வர்த்தக அனுமதியை வழங்குவதில்லை என்று யாழ்ப்பாண மாநகர சபை முடிவு செய்திருக்கிறது.

மக்களின் சுகாதாரத்தைப் பாதிக்கும் விதத்தில் இயங்கும் உணவு வியாபார நிலையம் எதுவாக இருப்பினும், அது சமூக நலனைப் பாதிக்கும் நிலையமாகவே கருதப்பட வேண்டும். அதில் இரண்டு தரப்பாகப் பிரிவதற்கு இடம் இல்லை.

எமது முன்னோர் உணவையே மருந்தாகக்கொண்டு, மருந்துகளைத் தேடிச் செல்வதைத் தவிர்த்தார்கள். சுகதேகிகளாக வாழ்ந்தார்கள்.

உரிய உணவை, சமபல உணவை, அளவோடு உட்கொண்டால் நோய் அணுகாது. போதிய உடல் உழைப்பும் இருந்துவிட்டால் நோய் என்ன விலை? என்று கேட்கலாம்.

எங்கள் முற்பரம்பரையினர் உடற்றிடம் கொண்டவர்களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும், நீண்ட ஆயுளுடையவர்களாகவும் வாழ்ந்ததற்கு அவர்கள் உட்கொண்ட உணவும், உடல் உழைப்புமே காரணம்.

உடலில் நோய் அணுகாமல் தடுப்பதற்கு உணவு எந்தளவுக்கு உதவுகிறதோ அதே அளவுக்கு உணவே நோயாகவும் மாறிவிடும். உடகொள்ளும் உணவு சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் சமைக்கப்படாவிடில், அல்லது பரிமாறப்படாவிடில் இல்லாத நோய்களை எல்லாம் அது உடலில் உருவாக்கி விடும்.

சுத்தமற்ற, சுகாதாரமற்ற உணவுகள் என்பது நோய்க் கிருமிகள் கொண்ட அல்லது அவற்றை காவும் உணவுகள் என்பதே அர்த்தம். ஆகவே சுகாதாரம், சுத்தம் பேணாத உணவுச் சாலைகள் நோய் பரப்பும் கூடங்களாகவே கருதப்பட வேண்டும்.

வியாபாரம் - லாபம் - ஒன்றையே நோக்காகக் கொண்டு உணவுச் சாலைகள் மற்றும் உணவு பரிமாறும் நிலையங்களை நடத்துவோரில், பலர் தமது வாடிக்கையாளர்களும் மக்களே - மனிதர்களே - என்று நினைப்பதில்லை.

பழுதடைந்த பண்டங்களையும், பழைய பண்டங்களையும் மனம் கூசாமல் புதியவை போலப் பரிமாறுகிறார்கள். உணவு தயாரிக்கும் கூடங்கள் மற்றும் பாத்திரங்களை அசுத்தமாக வைத்திருக்கிறார்கள். சமைத்த சாப்பாடுகளை திறந்து வைக்கிறார்கள். இவற்றில் கிருமிகள் தொற்றிக் கொண்டு உடலில் சென்று நோய்களை உருவாக்கும் என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்கிறார்கள் இல்லை தங்கள் பண்டம் விற்பனையானால் சரி, அதனைச் சாப்பிடுபவனைப் பற்றி தாம் ஏன் கவலைப்பட வேண்டும் என்ற மனோபாவத்துடன் நடந்து கொள்கிறார்கள்.

உணர்ச்சிவசப்பட்டு அல்லது ஆத்திரமுற்று அடுத்தவனை வெட்டிக் கொல்பவன் செய்வது ஒரு கொலை. ஆனால் உணவு விடுதிகளில் சுகாதாரம் பேணாததால் அதன் உரிமையாளர்கள் மறைமுகமாகப் பல கொலை முயற்சிக் குற்றங்களைச் செய்கிறார்கள். சில வேளைகளில் பல கொலைகளுக்குக் காரண கர்த்தாக்கள் ஆகிவிடுவது உண்டு.

# புலிகளை நம்ப முடியாவிட்டால் அரசாங்கத்தை மட்டும் நம்பலாமா?

தென்னிலங்கையில், மொரட்டுவையைச் சேர்ந்த திரு. ஸ்ரனிஸ்லோஸ் பெரேரா என்பவர் புதுவகையான ஆசிரியர் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

தனது மனச்சாட்சியை பரிசோதனைக்கு ஆளாக்கும்வடிவத்தில்அந்தக் கடிதத்தை வரைந்திருக்கிறார்.

அவரது கடிதம் ''பரிசோதனைக்கு உள்ளாகும் மனச்சாட்சி'' என்ற தலைப்பில் 09-03-92 ஆம் திகதிய ''த ஐலண்ட்'' பத்திரிகையில் வெளியாகி இருந்தது.

திரு. பெரேராவின் அக்கடிதத்தை இங்கு தொகுத்து வெளியிடுகிறோம்.

சிங்களவருக்கும், தமிழருக்கும் இடையேயான உறவுகள் மேலும் மோசமடைந்து வருவதாகத் தெரிகின்றது.

நான் ஒரு சிங்களக் கிறிஸ்தவன். எனது மனச்சாட்சியையும், மனோ நிலையையும் நான் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளேன். அந்தப் பரிசோதனையையே இங்கு எழுதுகிறேன்.

★ சுமார் 20 லட்சம் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் இடம்பெயர்ந்தோ அல்லாமலோ அச்ச உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர். தினமும் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. உறுப்புகளை இழந்த படையினரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தீர்வு தான் கண்ணுக்குத் தெரிவதாக இல்லை. இனமோதல் தொடர்பான எனது கருத்துகளில் இம் மனிதப் பிரச்சினைக்கு ஏன் மிக அரிதாக முன்னுரிமை கொடுக்கப்படுகிறது? கடந்த காலச் சரித்திரங்கள் மற்றும் சட்ட பிரச்சினைகள் குறித்து நான் ஏன் மிகவும் கவலைப்படுகின்றேன்?

★ பிரிக்கப்பட்ட இலங்கையை நான் வெறுக்கின்றேன். ஒற்றையாட்சி அரசமைப்பைக் கொண்ட இலங்கையே எனக்கு புனிதமானது. ஆனால் ஏனையவற்றிலும் பார்க்க சமாதானம் தான் புனிதமானது என்பதை நான் மறப்பது ஏனோ? மொழிப்பிரச்சினைக் கொலைகள் உச்சக்கட்டம் அடைந்த போது மொழியிலும் பார்க்க சமாதானம் மிக முக்கியமானது' என்று பௌத்த தலைவர் டாக்டர்இ.டபிள்யு. அதிகாரம் கூறியதில் இருந்து நான் ஏன் பாடம் படிக்கவில்லை?

★ பேசி இணக்கம் காண்பது தான் ஒருவழியாக உள்ளது. ஆனால் அது குறித்து எனது சிந்தனை இப்படிச் செல்கிறது; 'தமிழர்களுடனான பிரச்சினை என்னவென்றால் அவர்கள் நீங்கள் கூடுதலாகக் கொடுத்தால் அவர்கள் இன்னும் கூடுதலாகக் கேட்பார்கள் என்பது தான். கொடுப்பதற்கு முடிவே காண முடியாது. ஆகவே

## சிங்களவரின் இதய சுத்தியை தமிழர் சந்தேகிப்பது நியாயமே!

அவர்களுக்கு ஒன்றுமே கொடுக்கக் கூடாது' ஆகவே எனது மனக்கதவு மூடுகிறது. என் இதயம் இறுக்கமடைகிறது. முன்வைப்பதற்குத் தீர்வு ஒன்றுமில்லை. இரு தரப்பிலும் கொலைகள் தொடருகின்றன.

யுத்தத்தில் எல்லாவற்றையும் இழக்க நான் தயாராக இருக்கின்றேன். ஆனால் சமாதானத்திற்காக ஒரு துண்டைக் கூட தியாகம் செய்ய நான் தயாராக இல்லை.

### இதுவா மனிதாபிமானம்

★ சமஷ்டி, வடக்கு-கிழக்கு இணைப்பு மாகாண சபைகளுக்குக் கூடிய அதிகாரங்கள்—இவை எல்லாம் நினைத்துப் பார்க்க முடியாதவை, பொறுத்துக் கொள்ள முடியாதவை, இவை பற்றி பிரஸ்தாபிப்பதே தேசத்

**உள்நாட்டு அரசியல்**

துரோகமாகும் என எண்ணுகிறேன்.

ஆனால் அப்பாவிகள் படுகொலை செய்யப்படுவது, 20 லட்சம் நம்மவர் துன்பப்படுவது, இராணுவச் செலவீனம் மலை போல் அதிகரிப்பது, வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் — இவையெல்லாம் பொறுத்துக் கொள்ளக் கூடியவை, விரும்பக் கூடியவை. எனது மனிதாபிமான உணர்வு தான் என்னே!

### அரசுகளை நம்பலாமா?

★ நான் சொல்கின்றேன்: ''விடுதலைப் புலிகளை ஒரு போதும் நம்ப முடியாது'' — என்று. ஆனால் ஒவ்வொரு அரசாங்கமும் அடுத்தடுத்து தமிழர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்தன; பின்னர் அவற்றை கிழித்தெறிந்தன. எம் அரசாங்கங்களை நம்ப முடியுமா? நிச்சயமாக சிங்களவர்களுக்கும் குறைகள் உள்ளன. தமிழர்களுக்கும் அப்படிக் குறைகள் உண்டு என்று நான் ஏன் நினைக்கக் கூடாது?

★ தீர்வு ஒன்றுடன் வெளிநாட்டுச்சக்தி ஒன்று வந்தால் நான் கூறுகின்றேன்: ''தலையிடாதே'' என்று ஆனால் வேறு எவரிடம் தீர்வு உண்டு? மற்றவர் தீர்வுடன் வரட்டும் என்று ஒவ்வொரு அரசியல் கட்சியும் காத்திருக்கிறது. எமது இதய சுத்தியை தமிழர்கள் சந்தேகப்படுவதில் நியாயம் இல்லையா?

### மன்னிப்புக் கேட்டோமா?

★ 1983 ஜூலையில் கொழும்பு எரிந்தது. அப்போது என்றுமில்லாதவாறு மிகப்பலம் பொருந்திய திறமையான அரசு பதவியில் இருந்தது. அன்று இரத்த ஆறு ஓடிய போது சக்தி வாய்ந்த அப்போதைய அரசாங்கம் எங்கேயிருந்தது என்பதே தெரியவில்லை. அப்பாவிச் சிங்கள மக்கள் கொலை செய்யப்பட்ட போது தமிழர்கள் வருத்தம் தெரிவிக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் தமிழர்கள் அன்று கொல்லப்பட்ட போது நாம் அவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டோமா? எல்லாவற்றிற்கும் ஆணைக்குழு நியமிக்கின்றோம். ஆனால் எமது நாட்டின் சரித்திரத்தில் இடம் பெற்ற மிக முக்கியமான துக்ககரமான 1983 கலவரத்தை விசாரிக்க ஆணைக்குழு நியமித்தோமா? ஏன் நியமிக்கவில்லை என்று கேட்டோமா?

★ வடக்கில் சிங்களவர்கள் கொல்லப்பட்டது பெரும் ஆத்திர மூட்டலை ஏற்படுத்தியது. குட்டிமணி மற்றும் தமிழ்க் கைதிகள் பதிலடியாக கொல்லப்பட்டனர். அச்சம்பவம் வானொலியில் அறிவிக்கப்பட்டவுடன் 'நல்ல செயல்' என்று என்னுள் இருந்த பழிவாங்கும் உணர்வு கூறியது. நான் மகிழ்ச்சியில் பட்டாசு கொளுத்தினேன். நான் ஒரு கிறிஸ்தவனா?

### ஒன்றாக வைத்திருக்க முடியுமா?

★ சோவியத் சாம்ராஜ்யம் நொருங்கி விட்டது. யூகோஸ்லேவியா சிதறுகிறது. ஆயுதபலத்துடன் எனது சிங்கள இனம் இலங்கையை ஒன்றாக வைத்திருக்க முடியும் என்று நான் நினைப்பது ஏனோ?

★ இயேசுபிரான் ஏழைக்கும், செல்வந்தனுக்கும் ''கொடுங்கள்''— என்று தான் கூறுகின்றார்.

''வாங்குங்கள் அல்லது கேட்டுப் பெறுங்கள்'' என்று இயேசுபிரான் ஒரு போதும் கூறவில்லை. இயேசுபிரானே! நீங்கள் கொடுப்பதில் மிகவும் உயர்ந்தவர். இயேசுபிரானே; நீங்கள் உடலைக் கொடுத்தீர், இரத்தத்தை கொடுத்தீர், உங்கள் அன்னையைக் கொடுத்தீர், உங்கள் உணர்வைக் கொடுத்தீர், உங்களையே வழங்கினீர்.''

நான் உங்களை [இயேசுபிரானை] பின்பற்றுபவன். எனது தமிழ் சகோதரனுக்கு கொடுப்பதற்கு நான் ஏன் தயக்கம் காட்டுகின்றேன்?

### தமிழருக்கும் அதே உரிமைகள்

★ கொடுப்பது பற்றி நான் பேசுவது ஏனோ? கொடுப்பதற்கு நான் யார்? தமிழர்களுக்குச் சலுகைகளை வழங்க நான் யார்? எனக்கு சமதையானவரே எனது தமிழ்ச் சகோதரன். இந்த நாட்டில் எனக்கு இருக்கும் அதே உரிமைகள் தான் எனது தமிழ்ச் சகோதரனுக்கும் உண்டு. கொடுப்பது பற்றி பேசுவதற்குப் பதில் தமிழ்ச் சோதரரின் சமத்துவ உரிமைகளை நான் ஏன் வெறுமனே அங்கீகரிக்கக் கூடாது? நான் ஏன் பெரிய அண்ணன் போன்று சிறிய சகோதரருடன் பேச வேண்டும்?

★ என்னிடம் உள்ள பாவங்களிலும் பார்க்க அதிக பாவங்கள் எனது தமிழ்ச் சகோதரனிடம் இருக்கக்கூடும் ஆனால் எனது பாவங்களை பரிசோதனைக்கு உட்படுத்தாமல் ஏன் தமிழ்ச் சகோதரனின் மனச்சாட்சியை மட்டும் நான் பரிசோதனை செய்ய வேண்டும்?

★ அன்பான தமிழ்ச் சகோதரனே, நீரோ அல்லது நானோ அரக்கன் அல்லன்; நீரும் துறவி அல்லன்; நானும் துறவி அல்லன். இருவருமே மனிதர்கள். நாம் தவறு விட்டுவிட்டோம். ஒன்றாக நாம் வருந்த முடியும் இருவரும் ஒன்றாக மன்னிக்கவும் முடியும். நீர் கொல்ல முடியும். நானும் கொல்ல முடியும். இந்த பிறவியில் நாம் ஒன்றாக வாழ முடியவில்லை என்றால் அடுத்த பிறவியில் விரைவில் நாம் ஒன்றாக வாழ்வோம். ★

# ஈழத் தேர்தல் போன்றதே பஞ்சாப் மாநிலத் தேர்தலும்

## ஆனால் வரதராஜப் பெருமாளின் கதி பியந்த் சிங்கிற்கு ஏற்படாது

அண்மையில் நடந்து முடிந்த பஞ்சாப் தேர்தல் பற்றி சென்னையிலிருந்து வெளியாகும் ராணி வாராந்தப் பத்திரிகையின் 8 - 3 - 1992 இதழில் ஒரு கட்டுரை பிரசுரமாகி இருந்தது. அதனை இங்கு தருகின்றோம்,

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்தில் இந்தியப் படை இருந்த பொழுது '' தமிழ் மாநிலம் '' என்று ஒன்றை உண்டாக்கி அதற்குத் தேர்தல் நடந்தது—

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் அந்தத் தேர்தல் நடந்தது. தேர்தலுக்குப் பிறகு மக்களின் அமோக ஆதரவுடன் வரதராஜப்பெருமாள் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டது. அவருக்கு முதல்வர் என்று முடியும் சூட்டப்பட்டது,

அதன் பின் ஈழத்தை விட்டு இந்தியப்படை வெளியேறியது. அப்பொழுது இந்திய இராணுவ விமானத்திலேயே வரதராஜப் பெருமாள் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டார். இன்றைக்கு அவர் இருக்கும் இடம் தெரிய வில்லை. அவ்வளவு இரகசிய மான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார். பிரதமர் நரசிம்மராவுக்குக் காவலாக இருக்கும் அந்த கறுப்புப் பூனைப் படையினர் வரதராஜப்பெருமாளின் காவலுக்கும் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

### பஞ்சாப் தேர்தல்:

நடந்து முடிந்துள்ள பஞ்சாப் மாநில சட்டசபைத் தேர்தலும், இலங்கையில் நடத்தப்பட்ட அந்தத் தமிழ் மாநிலத் தேர்தலைத் தான் நினைவுபடுத்துகிறது.

முழுக்க முழுக்க இராணுவத்தின் உதவியுடன் தான் பஞ்சாப் தேர்தல் நடந்தது.

தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் கூட இராணுவத்தின் பாதுகாப்புடன் தான் நடந்தன. ஒரு கூட்டத்தில் நூறு பேர் இருந்தார்கள் என்றால், துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினர் இரு நூறு பேர் காவலுக்கு நின்றார்கள்.

வாக்குச் சாவடிகளில் இராணுவம். வாக்களித்த இடத்தில் இராணுவம் வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்ட இடத்தில் இராணுவம். தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் கூட இராணுவத்தின் பாதுகாப்புடன் தான் ஊரிலே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

### தீவிரவாதிகள் எச்சரிக்கை

இவ்வளவு இராணுவப் பாதுகாப்பு இருந்தும்—

'பயப்படாமல் வாக்களிக்க வாருங்கள்!' என்று அரசாங்கம் கூவிக் கூவி அழைத்தும்

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### கச்சதீவைத்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
இந்த கோரிக்கையைப் பெருத்த கவனத்துடனும் மிகுந்த உன்னிப்பாகவும் கவனிக்கவேண்டியுள்ளது. ஆகவே இக்கோரிக்கை தொடர்பாக ஆழமாக ஆராயும்படி வெளியுறவு அமைச்சை நான் பணித்துள்ளேன்.''— இப்படி பிரதமர் நரசிம்மராவ் தமிழக அரசுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். தமிழக சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று இக்கடிதத்தைச் சமர்ப்பித்தார். [உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் இராசம்மா

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா இராசரத்தினம் [சுப்பிரமணியம்] என்பவர் நேற்று 23-3-92 கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சபாபதி இராசரத்தினத்தின் [சுப்பிரமணியத்தின்] அன்பு மனைவியும், ஸ்ரீகுருபரன் [ஓமான்], குமாரகுருபரன் [கனடா], ஞானகுருபரன் [ஜேர்மனி], ஜெயகுருபரன் [சுவிஸ்], மதிவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தாவின் அன்பு மாமியாரும், தாரகாவின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 23-3-92 கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல் :
அமிர்தா ஸ்ரீகுருபரன்
[20204]

### தெய்வநாயகி வைத்திலிங்கம்

திருமதி தெய்வநாயகி வைத்திலிங்கம் காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரபிரபா [உப அஞ்சல் அதிபர், யாழ். பல்கலைக்கழகம்], ஸுரளீதரன் [லண்டன்] ஆகியோரின் அன்புத்தாயாரும். அம்பலவாணர் [சட்டத்தரணி], இரங்கநாயகி, பத்மநாயகி, சண்முகநாதன் [யாழ். மாநகர சபை], ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவிசங்கர் [லண்டன்], நந்தகுமாரி [கனடா], தாரணி, காலஞ்சென்ற ரமேஷ்குமார் ஆகியோரின் பெரியதாயாரும், லோகஞானத்தின் [அஞ்சல் அதிபர், வண்ணார்பண்ணை] மாமியாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 24 - 3 - 92 காலை 10மணிக்கு நடைபெறும்.

தகவல்;
ஐ. லோகஞானம்
[மருமகன்]

சிவன்கோவில் வீதி,
திருநெல்வேலி தெற்கு.
[20203]

### அமரர் கனகசபை குமாரகுலசிங்கம்

[இ.போ.ச.டிப்போ - அதிபர், கோண்டாவில்]

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், கொட்டடியை வசிப்பிடமாகவும், தற்போது 15/2 வைமன் றோட், நல்லூரில் வசித்தவருமான க. குமாரகுலசிங்கம் நேற்றுக் காலமானார். இவர் கனகயோகத்தின் அன்புக்கணவரும், காலம்சென்ற ராதாரமணன், சித்தேஸ்வரி, சிவகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், லோகேந்திரா, சாரதாதேவி ஆகியோரின் அன்பு மாமனும், ஆரணி, ஐங்கரன், பிரம்மசங்கர், விஷ்ணுசங்கர் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று காலை 9-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி க. குமாரகுலசிங்கம்
[மனைவி]

15/2 வைமன் றோட்,
நல்லூர்.
[20200]

### திருமதி இராசம்மா சந்திரசேகரம்பிள்ளை

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கோப்பாய் வடக்கில் வசிப்பவருமான இளைப்பாறிய ஆசிரியை இராசம்மா சந்திரசேகரம்பிள்ளை 23-03-92 நேற்றுக் காலமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் சந்திரசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், சிறீகரன் [Acountant U. S. A.], யோகராணி, [ஆசிரியை, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், ரமி [U. S. A.], சந்திரகுமாரன் [ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி] ஆகியோரின் மாமியாரும், பிரியதர்சினி, கார்த்திகாயினி, சித்தார்த்தன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கோப்பாய் வடக்கு, சரவணபவானந்த வித்தியாலய ஒழுங்கையிலுள்ள இல்லத்தில் இன்று [24-03-92] காலை நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடகசு,
கோப்பாய்.
[20204]

தகவல்;
ச. யோகராணி
[மகள்]

### அவசரக்கூட்டம்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் வலிகாமம் பிரிவு உறுப்பினர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று நாளை மாலை 4 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

### உண்ணாவிரம்

அன்னை பூபதி நினைவையொட்டி சாவகச்சேரி வட்டவைப் பிரிவில் மட்டுவில் தெற்கு கேடிள்ஸ் மைதானத்தில் இன்று உண்ணாவிரதம் இடம்பெறும்.

தொடர்ந்து இரவு எட்டு மணிக்கு கருத்தரங்கும் நடைபெறும். [உ-3]

### மூதூரில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
கம் அறிவித்துள்ளது.

மூதூர் உதவி அரச அதிபர் பிரிவில் கடந்த ஞாயிறு மாலை 6 மணி முதல் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை நீக்கப்பட்டு மீண்டும் நேற்று மாலை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### பாலம்பிட்டி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
திருந்தது. இதற்கு அரசும் இணக்கம் தெரிவித்திருந்தது.

பாலம்பிட்டிப் பகுதியை தாக்குதலற்ற பிரதேசமாக்குவதற்கும் அரசு இப்போது சம்மதித்துள்ளது. விடுதலைப் புலிகளும் அதற்கு இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள்.

அதனைத் தொடர்ந்து பாலம்பிட்டியில் முகாம் அமைக்கும் வேலைகளை ஐ. நா. அகதிகள் தூதரகம் அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக அறியவந்துள்ளது.

### வடக்கு-கிழக்கு..

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மக்கள் தேர்தலில் கலந்து கொள்ளவில்லை.

'தேர்தலில் கலந்து கொள்ளாதீர்கள்' என்று சீக்கியத் தீவிரவாதிகள் எச்சரித்ததே இதற்குக் காரணம்.

**குறைந்த வாக்குப் பதிவு**

மொத்த வாக்காளர்களில் 26.5 சதம் பேர் தான் வாக்களித்தார்கள்.

7 ஆண்டுகளுக்கு முன்பு இதே பஞ்சாப் சட்டசபைத் தேர்தல் நடந்த பொழுது 67.5 சதம் வாக்குப்பதிவு ஆயிற்று.

அதன்படி பார்த்தால்—

இப்பொழுது தேர்தலை ஆதரித்தவர்கள்— 26 5 சதம் பேர்.

தேர்தலைப் புறக்கணித்தவர்கள் 41.5 சதம் பேர்.

தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் யார்? தேர்தலை நடத்தியவர்களா? புறக்கணித்தவர்களா? யாருக்கு மக்களின் ஆதரவு அதிகம்?

பஞ்சாப் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்று, அமைச்சரவையும் அமைத்திருக்கிறது.

ஆனால்,

மொத்த வாக்குகளில் இந்திரா காங்கிரஸுக்கு கிடைத்தது 10.18 சதம் வாக்குகளே.

அதாவது 100க்கு 10 பேர் தான் இந்திரா காங்கிரஸை ஆதரித்தார்கள். அந்த ஆதரவுடன் தான் அமைச்சரவை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த பியாந்த்சிங் முதல்வராகப் பதவி ஏற்றிருக்கிறார்.

ஆனாலும்— இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு ஆபத்தில்லை. ஐந்தாண்டு காலமும் ஆட்சியில் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனென்றால் ஈழத்தில் போல, இந்தியப்படை பஞ்சாப்பில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படாது. நிரந்தரமாக இருக்கும். [இ-த]

### தீர்வுக்கு புலிகள்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள், சம்பிரதாய அழைப்பு ஒன்றை, செஞ்சிலுவைச்சங்கச் சர்வதேசக் குழு மூலம் அனுப்பியிருந்தனர். அந்த அழைப்பில் பின்வரும் பிரதான அம்சங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன.

★ நாடாளுமன்றத் தெரிவுக் குழு வடபகுதிக்கு வந்து தமிழ் மக்கள் படும் துன்பங்களையும் கஷ்டங்களையும் நேரில் அறிந்துகொள்ள வேண்டும்.

★ தமிழ் மக்களின் மனநிலையை, அவர்களின் அரசியல் அபிலாசைகளை அறிந்த பின்னர் தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டம் என்ன என்பதை விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

★ தீர்வு திட்டத்தை அறிவித்த பின்னர் பாதுகாப்புக்கு வாக்குறுதி அளிக்கப்படும பட்சத்தில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் கொழும்புக்கு வருவது பற்றி ஆலோசிப்பர். அவர்கள் அங்கு வருவதற்கான பொறுப்பையும் ஆயத்தங்களையும் தெரிவுக் குழுவே செய்ய வேண்டும்.

இந்த அம்சங்கள் தெரிவுக் குழுவின் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும், அதன் பின்னரே முன்கண்ட முடிவு எடுக்கப்பட்டதாகவும் பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் நேற்றிரவு அறிவித்தார்.

விடுதலைப் புலிகள் அனுப்பிய சம்பிரதாய அழைப்புக் கடிதத்தைப் பரிசீலனை செய்த பின்னர் பின்வரும் தீர்மானங்களைத் தெரிவுக் குழு எடுத்ததாக அவர் மேலும் அறிவித்தார்.

★ தங்கள் அரசியல் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் மிகவும் தெளிவாக முதலில் எடுத்துச் சொல்லவேண்டும்.

★ தாங்கள் விரும்பும் அரசியல் அதிகாரப் பரவலாக்கல் பற்றி விரிவான யோசனைகளை விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்க வேண்டும்

**ஏமாற்றம் தரும் முடிவு**

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் இந்தப் புதிய முடிவுகள் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளன என்றும்—

அண்மைக்காலத்தில் பேச்சுகள் நடத்தும் வாய்ப்பை இம்முடிவுகள் இல்லாமற் செய்து விட்டன என்றும்— சில தமிழ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் கருத்து வெளியிடும்போது —

விடுதலைப் புலிகளின் முன் அங்கீகாரம் பெறாத எந்தத் தீர்வும் பலன் தராது — என்பதை ஒப்புக்கொண்டனர்.

ஆனால், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்வை ஏற்கத் தயாராக இருப்பதாக அரசு கூறியுள்ளது. [அ-எ]

### ஏழு போர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும்—

யாழ். குடாநாட்டில் வரையறுக்கப்பட்ட முறையில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் கூறின. [உ-எ]

### சாவகச்சேரியில் நாய்களுக்கு தடுப்பூசி

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வளர்ப்பு நாய்களுக்கு நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பீ. இரத்தினசபாபதியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று 24ஆம் திகதி மிருக வைத்தியர் அலுவலகத்தில் வைத்தும் —

25 ஆம் திகதி கல்வயல் நெசவு நிலையத்தில் வைத்தும்—

26 ஆம் திகதி நுணாவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலையத்தில் வைத்தும்—

27 ஆம் திகதி மீசாலை தெற்கு கணேசா சனசமூக நிலையத்தில் வைத்தும் தடுப்பு ஊசி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)

### துப்பாக்கிப் பிரயோகம்

கட்டுவன், வீமன்காமம், வளலாய், தச்சங்காடு காவலரண்களில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அன்று இரவு 10 மணியளவில் திருவடிநிலை, மாதகல் கடற்பகுதியில் இருந்தும் குடியிருப்புகளை நோக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

## மரண அறிவித்தல்

### திருமதி கிறிஸ்ரி ஜொய்சி மரியரட்ணம்

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல 30, ஆசீர்வாதம் ஒழுங்கை [ஆஸ்பத்திரி வீதி], யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி கிறிஸ்ரி ஜொய்சி மரியரட்ணம் நேற்றுக் காலமானார்.

இவர் சின்னப்பு மரியரட்ணத்தின் [உரிமையாளர்-மலாயன் பேக்ஹவுஸ்] அன்பு மனைவியும். சுஜன் [யாழ்.சம்பத்தரிசியார் கல்லூரி], பெனிற்றன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. பெரியதம்பி கணபதிப்பிள்ளை, திருமதி ராணி கணபதிப்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியை] ஆகியோரின் அன்பு மகளும், கிறிஸ்ரி ஜோய், கிறிஸ்ரி எல்மன் [அம்லன்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், அலோசியஸ் கருணரட்ணம் [தபால் அதிபர், மட்டக்களப்பு], டாக்டர் விக்ரர் ராஜகுலேந்திரன் [அவுஸ்திரேலியா], அருட் சகோதரர் ஜீவரட்ணம், திருமதி ரஞ்சிதரட்ணி யோகேந்திரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கணவன்

30, ஆசீர்வாதம் ஒழுங்கை,
[ஆஸ்பத்திரி வீதி]
யாழ்ப்பாணம்.
[20207]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org